பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 16 புதன்கிழமை 30.03.2022 கதிர் 145

**இனி இது ரகசியம் அல்ல!**

இன்றும் ஜனாதிபதி – கூட்டமைப்பு சந்திப்பை ஒட்டிய கொசுறுத் தகவல் ஒன்று.

அந்தப் பேச்சு வெள்ளியன்று நடைபெற்றது. ஞாயிறன்று தமிழகத்தின் தொலைக்காட்சி நிறுவனமான தந்தி ரி.வியில் ஒரு நிகழ்ச்சி, 'இலங்கையில்

☞2

# தமிழருக்குத் தீர்வு இது எனது கடமை

## பேச்சுக்கள் தொடரும் என்று கோட்டா உறுதி



எனது ஆட்சிக்காலத்தில் தமிழ் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைக் காண்பேன். அதன் ஒரு கட்டமாகவே தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளேன்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

☞2

## பத்து மணிநேரம் இன்று மின்வெட்டு



நாட்டில் இன்று 10 மணி நேரம் மின்வெட்டு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

☞9

## யாழில் 2 பொலிஸார் மீது கும்பல் ஒன்று தாக்குதல்!

நீதிமன்றப் பிடிவிறாந்தை நிறைவேற்றச் சென்ற பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்., உரும்பிராய், யோகபுரம் பகுதியைச் சேர்ந்த இருவருக்கு நீதிமன்ற வழக்கு விசாரணைகளுக்குச் செல்லத் தவறியமையால்

☞9

## கோட்டாபய அரசுக்கு எதிராக ஒரே நாளில் 150 போராட்டங்கள்

### ஏப்ரல் 7இல் சஜித் அணி அதிரடி



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசுக்கு எதிராக ஒரே நாளில் – ஒரே நேரத்தில் 150 போராட்டங்களை நாடு தழுவிய ரீதியில் நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய

☞2

## இது ஆட்சிக் கவிழ்ப்புக்கு சரியான சந்தர்ப்பம் அல்ல

### ரணில் சுட்டிக்காட்டு



அரசுக்கு எதிராக நியாயமான விடயங்களை முன்வைத்து நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமானால் அது பற்றி சாதகமாகப் பரிசீலிக்கலாம்.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி. ஊடகங்களிடம் தெரிவித்தார்.

☞9

## தேசிய அரசும் இல்லை; புதிய பிரதமரும் இல்லை

### வதந்தியை நம்பாதீர் என்கிறார் கோட்டா



எமது அரசு தொடர்ந்தும் பயணிக்கும். தேசிய அரசு அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை. பிரதமரை மாற்றும் யோசனையும் எமக்கு இல்லை. சிலரால் திட்டமிட்டு வெளியிடப்படும் வதந்திகளை எவரும் நம்ப வேண்டாம்.

– இவ்வாறு ஜனாதிபதி

☞9

## இனி பாடசாலை நேரம் 1 மணித்தியாலம் கூடும்!

### கல்வி அமைச்சு தீர்மானம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ச் 30

தேசிய ரீதியில் ஏப்ரல் மாதம் முதல் பாடசாலை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் அதிகரிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது என அறிய வருகின்றது.

☞2

## முதன்முறை தங்கத்தின் விலை 2 இலட்சம் ரூபாவாக அதிகரிப்பு

இலங்கையில் தங்கத்தின் விலை இன்றும் 15 ஆயிரம் ரூபா அதிகரித்து 2 இலட்சம் ரூபா என வரலாற்றில் முதல்தடவையாக புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.

நேற்று மாலை இந்த அதிகரிப்பு ஏற்பட்டது என்று தங்க வியாபாரிகள் தெரிவித்தனர்.

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி நெகிழ்வான நிலைக்கு விடப்பட்டதால் டொலரின் பெறுமதி தொடர்ச்சியாக

☞9



## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராகிறார் செந்தில் தொண்டமான்

### தேசிய சபை பச்சைக்கொடி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவராக செந்தில் தொண்டமான் நியமிக்கப்படவுள்ளார்.

தலைமைப் பதவிக்கு போட்டி எதுவும் நிலவாது எனவும்,

☞9

eDUS Learning made lovable
Online School with GLOBAL STANDARDS
சிறந்த Online கல்விக்கான நிரந்தர தீர்வு..!!
English & Tamil Medium
அனைத்து பாடங்களுக்குமான ஒன்லைன் வகுப்புகள் எம்மிடமிருந்து.
தரம் 1 - 5 (Primary) தரம் 6 - 11 (Secondary) G.C.E A/L
Enroll Now
Admissions
www.edus.lk
0777 123 330
அனைத்து பெற்றோர் மாணவரினதும் நம்பிக்கைக்குரிய ஒன்லைன் கல்விச்சேவை..!

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
என்ன நடக்கின்றது? வாங்க பேசலாம்...!' – என்ற தலைப்பில் பிரபல தொகுப்பாளர் அசோகவர்ஷினி நடத்தும் நிகழ்ச்சி அது. சுமந்திரனும், இந்தியாவின் மூத்த பத்திரிகையாளர் கோலாகலஸ்ரீநிவாஸும் பங்கு பற்றினர்.

அந்த நிகழ்வில் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சுமந்திரன் பதிலளித்தார். ராஜபக்ஷக்கள் தமிழர்களை நீண்ட காலமாக ஏமாற்றினர், இப்போதும் ஏமாற்றுவர் என்ற எச்சரிக்கை உணர்வுடன்தான் பேச்சுக்கு செல்கிறோம் என்ற சாரப்பட சுமந்திரன் பதில் கூறினார்.

சுமந்திரனின் கருத்தின் மொழிபெயர்ப்பைப் படித்த அரசுத் தரப்பு பிரதிநிதியான வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் 'அப்செட்'டானார். உடனே விரைந்து பிரதமர் மஹிந்தவுடன் அது குறித்துப் பேசினார்.

"நாங்கள் தென்னிலங்கையில் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும், தமிழ்க் கூட்டமைப்புடன் நேர்மையான முறையில் பேச்சுக்குப் போகின்றோம் என்று வெளிப்படையாக அறிவித்துச் செயற்படுகின்றோம். ஆனால் கூட்டமைப்பில் சுமந்திரனே இப்படிக் கூறினால் அவர்களுடன் எப்படிப் பேசுவது?'' – என்று கூறி பிரதமரையும் குழப்பினார் பேராசிரியர் பீரிஸ்.

"இது குறித்து நான் சுமந்திரனிடம் நேரடியாகவே கேட்கப் போகிறேன்." – என்று பிரதமரிடம் தெரிவித்திருக்கின்றார் பீரிஸ்.

இதற்கிடையில், விடயம் ஜனாதிபதி கோட்டாபய வரை சென்று விட்டது. இந்திய தொலைக்காட்சி, புலம்பெயர் சமூகம் போன்றவற்றை எதிர்கொள்வதில் கூட்டமைப்புக்கு உள்ள நெருக்கடிகளைப் புரிந்து கொண்டவர் போல கருத்து வெளியிட்டு, அந்த விடயத்தை அப்படியே முடித்து வைத்தார் ஜனாதிபதி.

தமக்கு எதிராக – தமது தொலைக்காட்சிப் பேட்டிக் கருத்து எதிராக – ஆளும் தரப்புக்குள் பெரும் அதிருப்தி எழுந்துள்ளது என்ற தகவல் சுமந்திரனுக்கு எட்ட முன்னரே, அந்தப் பிரச்சினையை கவனத்தில் எடுக்கத் தேவையில்லை என்ற தீர்மானத்தை மேற்கொண்டு விடயத்தை முடித்து வைத்தார் ஜனாதிபதி என அறிய வந்தது.

மறுபுறத்தில் ஜனாதிபதி – கூட்டமைப்பு பேச்சுக்கு எதிராகக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ரெலோ 'கொழுவிக் கொண்டு' நிற்கின்றது என்று பார்த்தால், தமிழரசு எம்.பியான சாள்ஸ் நிர்மலநாதன் இன்னொரு புறம் தன் கைவரிசையைக்காட்டத்தொடங்கியிருக்கின்றார். அந்தச் சந்திப்பில் சம்பந்தன் தமக்கு அடுத்து சுமந்திரன் கருத்துக் கூறுவார் என்று தெரிவித்து, சுமந்திரனுக்கு முக்கியத்துவம் கொடுத்து, தங்களுக்குக் கருத்துக் கூற இடமளிக்கவில்லை என்ற ஆதங்கம் சாள்ஸ் நிர்மலநாதனுக்கு. அதனை இணையத் தளம் ஒன்றுக்கு விடயமாக முன்னிறுத்தி வாங்கித் தள்ளியிருக்கின்றார் அவர்.

இதற்கிடையில், அரசுடன் இடம்பெற்ற பேச்சுகள் மற்றும் விடயங்களை ஆராய்வதற்காக தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு விரைவில் நிகர்நிலையில் கூடவிருப்பதாகத் தெரிகின்றது.

இந்தப் பிரச்சினைகள் குறித்து அந்தக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்படக் கூடும் என எதிர்பார்க்கலாம்.

★ ★ ★

'வறுமையின் நிறம் சிவப்பு' என்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வந்த படம். கமலஹாசன், ஸ்ரீதேவி நடித்தது.

நம் நாட்டிலும் இப்போது வறுமை பற்றிப் படர ஆரம்பித்து விட்டது. விளைவு...? வேலியே பயிரை மேயும் நிலைமை.

காங்கேசன் சீமெந்து ஆலையில் இருந்த இயந்திரப் பாகங்கள் பழைய இரும்புக்குக் களவாடப்பட்டுள்ளன. இதைஒட்டிஇருவர்கைதுசெய்யப்பட்டனர். இருவரும் இராணுவச் சிப்பாய்கள் என்பது பின்னர் தெரிய வந்துள்ளது.

மாதகல் கடல் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகின் அங்கர் (நங்கூரம்) களவாடப்பட்டமை தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவர் கடற்படைச் சிப்பாய் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டம் நாட்டாங்கண்டல் பொலிஸ் நிலையப் பிரிவில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிய டிராக்டரை கைப்பற்றிய பொலிஸார் அவற்றை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்திருந்த போது, அங்கிருந்து மாயமாக அவை மறைந்து விட்டன.

'வறுமையின் நிறம் சிவப்பு' என்பது 'வறுமையின் நிறம் சீருடை' என்று மாறி விட்டதோ?

– மின்னல் –

## இனி பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கொவிட் தொற்றால் பாடசாலைகள் மூடப்பட்டிருந்த காரணத்தால் பாடசாலைக் கல்வி ஆண்டு தாமதமாகவே தொடங்குகின்றது.

2022 ஆம் ஆண்டிற்கான கல்வி ஆண்டு – முதலாம் தவணை – எதிர் வரும் 18.04.2022 முதல் ஆரம்பிக்கவுள்ளது. எனினும் இந்தக் கல்வி ஆண்டை முழுதாகத் தாமதிக்க விடாமல் அதனை – அதாவது மூன்று தவணைகளையும் – இவ்வாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் முடிக்கவும், அடுத்த கல்வி ஆண்டை வழமை போல அடுத்த ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

வரும் ஏப்ரல் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் புதிய கல்வியாண்டு டிசெம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படுவதால் இந்தக் கல்வியாண்டில் பாடசாலை நாள்கள் ஆக 139 தினங்கள் மட்டுமே கிட்டும் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது. இக் குறுகிய காலத்தில் மாணவர்களிற்கான இவ் வருடப் பாடவிதானங்களைப் பூர்த்தி செய்யமுடியாதநிலைமைஏற்பட்டுள்ளது.

இதனால் பாடசாலை நாள்களை அல்லது நேரத்தை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் நேர்ந்துள்ளது. சனி, ஞாயிற்றுக் கிழமைகளை மேலதிக பாடசாலை நாள்களாக்குவது என்பது உட்பட பல மாற்றுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. எனினும் அவற்றில் உள்ள நெருக்கடிகளும் சுட்டிக் காட்டப்பட்டன.

இந்தப் பின்புலத்தில், 139 பாடசாலை நாள்களும் பாடசாலை நேரத்தை ஒரு மணி நேரம் அதிகரிப்பதற்கு ஆராயப்பட்டது. அதற்கமைய பாடசாலை நடைபெறும் 139 நாள்களும் மேலதிகமாக ஒரு மணி நேரம் பாடசாலை நடாத்தினால் மேலதிகமாக 26 நாள்களிற்கான – கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. அதனையடுத்தே பாடசாலை வேளையை ஒரு மணி நேரம் அதிகரிக்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் எதிர்வரும் ஏப்பிரல் 18 முதல் பாடசாலைகள் தரம் 01 முதல் உயர் தரம் வரை சகல வகுப்புக்களும் ஒரு மணி நேரம் அதிகரிக்கப்படவுள்ளன.

இதுவரை தினசரி 6 மணித்தியாலங்களாக இருந்த பாடசாலை நேரம் இனி 7 மணித்தியாலங்களாக உயரும்.

## கோட்டாபய அரசு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

இதன்படி ஏப்ரல் 07 ஆம் திகதி தேர்தல் தொகுதிகள்வாரியாக குறித்த போராட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் தொகுதி அமைப்பாளர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இப்போராட்டங்களில் பங்கேற்று, தமது எதிர்ப்பை வெளிப்படுத்தவுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் மே தினக் கூட்டமும் பேரணியும் கண்டியில் இடம்பெறவுள்ளது.

அதன்பின்னர் ஜூன் 30 ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தியின் பிக்குகள் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ளது. டிசம்பர் மாதம் கட்சியின் தேசிய மாநாடு இடம்பெறவுள்ளது.

## தமிழருக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, கைதிகள் விடுதலை உள்ளிட்ட 5 விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் முதல்கட்டமாகப் பேசியுள்ளேன்.

இந்தப்பேச்சுக்குப்பலதரப்பிலிருந்தும் வரவேற்புக் கிடைத்துள்ளது. பேச்சுக்கள் தொடரும்.

தமிழ் மக்களின் சகல பிரச்சினைகளுக்கும் நான் தீர்வுகளைக் காண்பேன். இது எனது கடமை.

புலம்பெயர் தமிழர்களுடனும் நான் பேசத் தயாராகவுள்ளேன். நாட்டின் அபிவிருத்திக்கு அவர்களின் பங்களிப்பு மிகவும் அவசியம் – என்றார்.

# மரண அறிவித்தல்



## குருசாமி வீரசிங்கம்

யாழ்.சாவகச்சேரி, கல்வயலை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குருசாமி வீரசிங்கம் நேற்று (29.03.2022) செவ்வாய்க் கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குருசாமி – சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமரகுருவின் பாசமிகு அண்ணனும், காலஞ்சென்ற அம்பிகாவதியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை – இராசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், முருகானந்தி, குகானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலஞ்சென்ற சிவகரன், சிவகௌரி (கனடா), பத்மலோஜினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், இராஜகுமார், கிருஷ்ணவேணி (கனடா), சுயந்தன் (கனடா), முகுந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சரூபன், அருண், மதுஷன், நிதுஷன், அஜ்சன், அத்மிகா, அமிர்தன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (30.03.2022) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயாணத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,
கல்வயல், சாவகச்சேரி.

தகவல்:—குடும்பத்தினர்.
0770458184




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## காலம் தாழ்த்திய ஞானம்!

**இலங்கை இப்போது எதிர்கொண்டிருக்கும் மோசமான பொருளாதார நெருக்குவாரங்களில் இருந்து மீளுவதற்கு பல்வேறு நாடுகளும் அவ்வப்போது வழங்கக் கூடிய தற்காலிக கடன்கள் தீர்வு அல்ல.**

**அவை, தற்காலிகமாக மூச்சைப் பிடித்துக் கொள்வதற்காக நாம் மேலதிகமாக வாங்கிக் கட்டிக் கொள்ளும் கடப்பாடுகளே தவிர உண்மையில் உதவியோ, நிவாரணமோ, மானியமோ அல்ல.**

**நாடு இந்த நெருக்கடியிலிருந்து மீளுவதானால் உள்நாட்டில் வர்த்தகம், உற்பத்தி, ஏற்றுமதி, அபிவிருத்திப் பெருக்கம் நேர வேண்டும். அவற்றை மேம்படுத்துவதற்கான உதவித் திட்டங்கள் வெளியில் இருந்து கிட்ட வேண்டும்.**

**இந்த மார்க்கத்தை நோக்கி நகரும் பார்வை இப்போது தான் இந்த ஆட்சிப் பீடத்துக்குக் கிட்டியிருப்பதாகத் தெரிகின்றது.**

**பழைய அனுபவப் பாடங்களில் இருந்து – பட்டறிவில் இருந்து – உபாயங்களையும் மார்க்கங்களையும் கண்டு கொள்ளாதவனை முட்டாள் என்போம். அத்தகைய முட்டாள்தனமாகத்தான் இந்த ஆட்சிப் பீடம் இதுவரை செயற்பட்டு வந்திருக்கின்றது என்பது திண்ணம்.**

**இலங்கையின் இனப்பிரச்சினையின் போக்கை உன்னிப்பாகக் கவனித்து வருபவர்களுக்கு சில விடயங்கள் புரியும்.**

**விடுதலைப் புலிகளுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான இலங்கை அரசுக்கும் அப்போது சமாதானப் பேச்சுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சமஷ்டித் தீர்வு ஒன்றை இலங்கை அரசுடன் சேர்ந்து காண்பதற்கு புலிகள் இணங்கி வந்தனர். அதுபற்றிய ஒஸ்லோ அறிவிப்பு வெளியிட்டு சரியாக ஆறு மாதத்தின் பின்னர் – 2003 ஜூனில் – டோக்கியோவில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெற்றது.**

**இலங்கை அரசுக்கும் புலிகளுக்கு இடையிலான சமரசப் பேச்சுகள் முட்டுப்பட்டு நின்ற சமயம் அது.**

**இரண்டு தரப்புகளையும் பார்த்து உதவி வழங்கும் நாடுகள் ஓர் அறிவிப்பை அந்த மாநாட்டின் முடிவில் வெளியிட்டன.**

**நீங்கள் இருவரும் சமாதானப் பேச்சை வெற்றிகரமாக முன்னெடுத்துத் தொடர்ந்து ஒரு தீர்வை நோக்கி நகருவீர்களாயின், யுத்தத்தினால் அழிந்து போன பிரதேசங்களை கட்டி எழுப்புவதற்காக அடுத்த மூன்று ஆண்டுகளுக்குள் (2003 முதல் 2006 வரையான காலத்துக்குள்) 450 கோடி அமெரிக்க டொலரை உலக நாடுகள் உதவியாக உங்கள் நாட்டுக்கு வழங்கும் – என்பதுதான் அந்த அறிவிப்பு.**

**இன்றைய கணக்கில் 450 கோடி டொலர் என்றால் சுமார் ஒரு லட்சத்து 35ஆயிரம் கோடி ரூபா. அதுவும் கடன் அல்ல. நேரடி உதவி. வெகுமதி. சன்மானம். அன்பளிப்பு.**

**நாட்டின் தேசிய இனப்பிரச்சினைக்கு – பிணக்குக்கு – நிரந்தரமான, நீடித்து, நிலைக்கக் கூடிய நியாயமான, நீதியான ஒரு தீர்வு காணப்படுமானால் கடனாக அல்ல, அதையும் தாண்டி நிரந்தரத் தீர்வை நிலைநிறுத்தும் நன்னோக்கிற்காக உலகம் உதவியாகப் பெரும்தொகையை வாரி வழங்கும். அதைப் பெற்று நாட்டை வளம் கொழிக்க வைக்கச் செய்வதற்காகவே அப்போது புலிகளுடன் சமரசம் செய்து தீர்வு காண விழைந்தார் ரணில்.**

**இப்போதும் கூட, பேரினவாதத்தைக் கைவிட்டு, தமிழருக்கு நீதியான தீர்வை வழங்க ராஜபக்ஷக்கள் முன்வருவார்களானால் இந்த நெருக்குவாரப் பின்னடைவு நிலையில் இருந்து நாட்டை மீட்டு, நிரந்தர அமைதியை இங்கு நிலைநிறுத்தும் எத்தனத்துக்கு சர்வதேசம் நிச்சயம் உதவும். அந்த மார்க்கமே ஒரே வழி என்பதை ராஜபக்ஷக்கள் காலம் பிந்தி புரிந்து கொண்டமையில்தான் தமிழர் தரப்போடு சமரசம் காண இப்போது இறங்கி வந்திருக்கின்றார்கள்.**

# ஜனாதிபதி கோட்டாபய மிக பலவீனமானவர் அவருக்கு முதுகெலும்பு என்பது கிடையாது

### குமார வெல்கமவின் கட்சி தாக்குதல்



கோட்டாபய ராஜபக்ஷ ரொம்ப ரொம்ப பலவீனமானவர், அவருக்கு முதுகெலும்பு கிடையாது என்று முன்னாள் அமைச்சர் குமார வெல்கம தலைமையிலான புதிய லங்கா சுதந்திர கட்சியின் பொருளாளரும், வடமேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான உபுலாங்கனி மாலகமுவ தெரிவித்தார்.

புதிய லங்கா சுதந்திர கட்சியின் உப செயலாளரும், குமார வெல்கமவின் புதல்வருமான பாரிஸ்டர் செனால் வெல்கம அடங்கலான கட்சி உயர் மட்ட குழு இரு நாள் விஜயம் மேற்கொண்டு அம்பாறை கரையோர மாவட்டத்துக்கு விஜயம் செய்தது. உபுலாங்கனி மாலகமுவ நிந்தவூரில் வைத்து ஊடகங்களுக்குத் தெரிவித்தவை வருமாறு -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ரொம்ப ரொம்ப பலவீனம் ஆனவர். அவர் இராணுவத்தில் இருந்தார் என்பது வேறு விடயம். அவர் ஏனையோரின் உத்தரவு, அறிவுறுத்தல் ஆகியவற்றுக்கு அமையவே அங்கு செயற்பட்டார் என்பதே உண்மை.

அவருக்கு முதுகெலும்பு கிடையாது. ஆனால் தலைக்கனம் அளவுக்கு மிஞ்சிக் கிடக்கின்றது. எவருடைய சொல்லையும் கேட்டு நடக்கின்றார் இல்லை.

இந்நாட்டை பீடித்த சாபக் கேடாக பசில் ராஜபக்ஷ இருக்கின்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிச்சயமாக ஒரு நன்மதிப்பு இருந்தது. ஆனால் அது இப்போது இல்லாமல் போய் விட்டது.

நாடு கெட்டு குட்டி சுவராகிக் கொண்டிருக்கின்றது. ஏதிலிகளாக நாட்டு மக்கள் மாறிக் கொண்டிருக்கின்றனர். ஆட்சி மாற்றம் ஒன்றே மீட்சிக்கான ஒரே வழி.

ஜனாதிபதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும், அரசாங்கத்தை வீழ்த்த வேண்டும். இதற்காக நாட்டு மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு பொங்கி எழ வேண்டும்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அழைத்து பேச்சு நடத்தி உள்ளார். அது ஒரு பாசாங்கு நாடகமே ஆகும்.

அவர்கள் எதையும் தமிழர்களுக்கு வழங்கப் போவதில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் அழைத்து பேசி இருந்தால்கூட ஒரு பேச்சுக்கு அவரை நம்பி இருக்க முடியும்.

எமது கட்சிக்கு இன, மத, மொழி பேதங்கள் கிடையாது. அனைவரும் இந்நாட்டு மக்களே. அனைவரும் மகிழ்ச்சியாக, நிம்மதியாக, சமாதானமாக வாழ வேண்டும். நாம் வரவுள்ள எந்த தேர்தலாக இருந்தாலும் நிச்சயமாகநாளாவியரீதியில்போட்டியிடுவோம். - என்றார்.

# கடற்தொழில் மற்றும் கருவாடு உற்பத்தி மன்னாரில் எரிபொருளின்மையால் பாதிப்பு



நாட்டில் தொடர்ச்சியாக ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் மாவட்டத்தில் கடற்தொழில் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட கருவாடு உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடற்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான மண்ணெண்ணெய் உரிய விதத்தில் தேவையான அளவு கிடைக்காமையால் மன்னார் மாவட்டத்தில் கடற்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் கடற்தொழிலாளர்கள் கடற்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

அதேநேரம் நீண்ட வரிசையில் நின்று மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே மண்ணெண்ணெய் கொள்வனவு செய்ய வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

கடற்தொழில் இன்மையால் மீன்களின் விலை அதிகரித்துள்ளமையால் கருவாடு உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கருவாடுகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. இதன் காரணமாக மக்கள் தற்போது கருவாடுகளைக் கூடக் கொள்வனவு செய்ய முடியாத நிலை நிலவி வருகின்றது.

கடந்த மாதம் 900 ரூபா விற்பனை செய்யப்பட்ட நெத்தலி கருவாடு தற்போது 1150 ரூபாயாகவும், கடந்த மாதம் 1100 ரூபாவுக்கு விற் பனை செய்யப்பட்ட கட்டா கருவாடு 1350ரூபாவாகவும் விலை அதிகரித்துக் காணப்படுவதோடு, ஏனைய வகை கருவாடுகள் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# சிகை அலங்கரிப்பு நிலையத்திலும் முல்லைத்தீவில் கட்டணம் உயர்வு!

முல்லைத்தீவு மாவட்ட அழகக சங்கம் சிகை அலங்கார நிலையங்கள் ஊடாக வழங்கப்படும் சிகை அலங்கார சேவைகளுக்கான விலையைஅதிகரித்துள்ளதாகஅறிவித்துள்ளது.

ஏப்ரல் மாதம் தொடக்கம் இந்த விலை அதிகரிப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து சிகை அலங்கார நிலையங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 12 வயதிற்குக் குறைவானவர்களுக்கு முடிவெட்ட 250 ரூபாவும், பெரியவர்களுக்கு முடிவெட்ட 300ரூபாவும் அறவிடப்படுவதாக தெரியவருகிறது.

பெண்பிள்ளைகளுக்கு முடிவெட்ட 500 ரூபாவாகவும், முடிவெட்டி டை அடிக்க 550 ரூபாவாகவும் மேலதிக சேவைக்கேற்ற வகையில் கட்டணங்கள் அறவிடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# கடற்தொழில் அமைச்சரைச் சந்தித்தார் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்!





இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி ஜெய்சங்கர் மற்றும் கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

பருத்தித்துறை உட்பட வடக்கு, கிழக்குப் பகுதிகளில் கடற்தொழில் துறைமுகங்களை அமைத்துத் தருவதற்கு ஏற்கனவே இந்தியா சம்மதம் தெரிவித்துள்ள நிலையில், இலங்கை கடற்தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு இந்தியாவால் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக இரண்டு நாடுகளினதும் அமைச்சர்கள் இந்தச் சந்திப்பின் போது விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

குறிப்பாக, இந்திய கடற்தொழிலாளர்கள் அத்துமீறி எல்லை தாண்டி வந்து இலங்கை கடல் பரப்பில் சட்டவிரோத தொழில் முறைகளைப் பயன்படுத்துவதை கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளன.

இதன்போது, இரண்டு நாட்டு கடற்தொழிலாளர்களுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் கச்சதீவில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு தொடர்பாக எடுத்துரைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அண்மையில் இடம்பெற்ற அதிகாரிகள் மட்டக் கலந்துரையாடலும் பயனுள்ளதாக அமைந்திருந்தமையை சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறான பேச்சுகளை வினைத்திறனாகத் தொடர்ந்தும் மேற்கொள்வதன் ஊடாக, இந்த விவகாரத்துக்கு அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை அடைய முடியுமென இரண்டு நாடுகளின் அமைச்சர்களும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் வடக்கு மக்களின் எதிர்பார்ப்புக்களை அடிப்படையில் சில வேண்டுகோள்களை இந்திய வெளியுறவு அமைச்சரிடம் முன்வைத்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்தொழில் மற்றும் நீர் வேளாண்மை அபிவிருத்தி தொடர்பான சுமார் 23 கோரிக்கைகளையும் முன்வைத்துள்ளார்.

# காணாமல் போன மாணவன் பெல்மடுல்லவில் சடலமாக மீட்பு

## 3 மாணவர்கள் கைது

பெல்மடுல்ல பிரதேசத்தில் உள்ள கிரிதிஎல அணைக்கட்டில் இருந்து சிறுவன் ஒருவனின் சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பெல்மடுல்ல, பரண்டுவ பகுதியைச் சேர்ந்த 16 வயதுடைய மாணவன் ஒருவனே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளான்.

குறித்த மாணவன் அப்பகுதியில் 10 ஆம் வகுப்பில் படித்து வருகின்றமை தெரியவந்துள்ளது.

மேற்படி மாணவன் கடந்த 26 ஆம் திகதி லெல்லுப்பிட்டிய பகுதிக்குச் செல்வதாக கூறி வீட்டை விட்டு சென்றுள்ளமையுடன், அவர் வீடு திரும்பாதமை தொடர்பில் அவரது பெற்றோர் கடந்த 27 ஆம் திகதி இரத்தினபுரி பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை அந்த மாணவனின் சடலம் மீட்கப்பட்டதை அடுத்து பொலிஸாரின் மேலதிக விசாரணைகளில் மாணவன் மேலும் சில மாணவர்களுடன் நீர்த்தேக்கத்துக்கு நீராடச் சென்றுள்ளார் எனத் தெரியவந்துள்ளது.

மாணவன் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார் எனவும், அவருடன் குளித்துக் கொண்டிருந்த ஏனைய மாணவர்கள் யாரிடமும் கூறாமல் அங்கிருந்து சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாணவன் காணாமல் போனமை தொடர்பாக யாரிடமும் கூறாமல் அங்கிருந்து சென்ற மூன்று மாணவர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பெல்மடுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையர்கள் நாட்டுக்கு டொலர்களை அனுப்புவது மூன்று மடங்காக குறைந்தது

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் அங்கிருந்து இலங்கைக்கு டொலர்களை அனுப்புவது சுமார் மூன்று மடங்காக குறைந்துள்ளது.

கடந்த 2021 ஆம் ஆண்டு ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் 125.5 கோடி டொலர்களை வெளிநாடுகளில் தொழில் புரிவோர் இலங்கைக்கு அனுப்பி இருந்தனர்.

எனினும் இந்த ஆண்டு அந்த தொகை 46.41 கோடி டொலர்களாகக் குறைந்துள்ளன. கடந்த காலங்களில் அந்நிய செலாவணி சந்தையை செயற்கையாகக் கட்டுப்படுத்தி வைத்திருந்ததன் காரணமாக இலங்கைக்கு டொலர்கள் வருவது வீழ்ச்சியடைந்தது.

இதன் காரணமாக இலங்கைக்கு 550 கோடி டொலர் கிடைக்காமல் போயுள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்கள் நாட்டுக்கு டொலர்களை அனுப்பாமை மற்றும் ஏற்றுமதி வர்த்தகம் குறைந்தமை என்பன இதற்கு காரணமாக அமைந்ததாகக் கூறப்படுகிறது.

# இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகளைச் சந்தித்தார் சிவஞானம் சிறிதரன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனுக்கும், இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று இடம்பெற்றுள்ளது

இச் சந்திப்பு நாடாளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் பிரச்சினை காரணமாக விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலும் அவற்றை குறைப்பதற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய பொறிமுறை தொடர்பிலும், உரப்பிரச்சினை தொடர்பிலும் உரமின்மை காரணமாகக் கடந்த போக செய்கையில் வீழ்ச்சி தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளன.

இந்தக் கலந்துரையாடலில் இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனத்தின் தலைவர் நடராஜா, சம்மேளனத்தின் செயலாளரும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சிவமோகன் பெரிய பரந்தன் வட்டார அமைப்பாளர் யதீஸ்வரன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

# முல்லைத்தீவில் பல இடங்களில் எரிபொருள் இல்லை சில பகுதிகளில் நீண்ட வரிசையில் மக்கள் காத்திருப்பு





நாடளாவிய ரீதியில் எரிபொருளுக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ள நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்திலும் எரிபொருள்களைப் பெற்றுக்கொள்ள மக்கள் நீண்ட வரிசைகளில் நிற்கவேண்டிய நிலையே காணப்படுகிறது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு எரிபொருள் நிலையங்களிலும் டீசல் வந்து இறங்குகின்ற அன்றைய தினமே அனைத்தும் முடிவடையும் நிலைமை தொடர்கின்றது.

மக்கள் வீடுகளில் பதுக்கி வைப்பதால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் குற்றம் சாட்டப்பட்டு வருகின்ற நிலை யிலும், தொடர்ச்சியாக ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகமான மக்கள் வரிசையில் நின்று எரிபொருள்களைப் பெற்றுக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு எரிபொருள் நிலையங்களில் எந்த ஓர் எரிபொருளும் இல்லாத நிலையில், எரிபொருள் இருக்கும் சில இடங்களில் அதிக மக்கள் கூடியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, மண்ணெண்ணெய் பெறுவதற்காகவும் நீண்ட வரிசைகள் காணப்படும் நிலையில் குடும்ப அட்டைகளுக்கு 500 ரூபா வீதம் மண்ணெண்ணெய் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

காலைக்கதிர் Kalaikkathir

# உணவுப் பாதுகாப்புச் சட்டத்தை மீறிய 407 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அதிரடி

கொழும்பு, மார்ச் 30

இம்மாதம் முதலாம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டு வந்த பரிசோதனைகளின் போது உணவு பாதுகாப்பு சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் 407 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

பொருள்கள் கொள்வனவின்போது நுகர்வோர் போதிய கவனம் செலுத்த வேண்டும் என பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய பல்பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்கள் பரிசோதிக்கப்பட்டு வருகின்றன என சங்கத்தின் தலைவர் உப்புல் றோஹண தெரிவித்தார். இந்த விடயம் குறித்து அவர் மேலும் கூறுகையில் –

விசேடமாக, தற்போது நாட்டில் நிலவி வரும் மின் துண்டிப்பு காரணமாக குளிர்சாதனப் பெட்டிகளில் வைக்கப்பட வேண்டிய உணவுப் பொருள்கள் கெட்டுப்போகின்றமை தொடர்பாகக் கண்டறியப்பட்டுள்ளது. மீன் மற்றும் இறைச்சி வகைகள் கெட்டுப்போகின்றன.

பல்பொருள் விற்பனை நிலையங்கள் மற்றும் மீன், இறைச்சி விற்பனை நிலையங்களில் உள்ள பொருள்கள் மனித பாவனைக்கு பயன்படுத்த முடியாத வையாக அமைந்துள்ளன.

இந்நாள்களில் பலகாரங்கள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் தயாரிக்கப்படும் என்பதால், தரம் குறைந்த அல்லது காலாவதியான தேங்காய் எண்ணெய் போன்றவை சந்தையில் காணப்படும். இவை தொடர்பாகவும் நாம் தீவிர கண்காணிப்புடன் செயற்பட்டு வருகிறோம். மளிகை பொருள்களை கொள்வனவு செய்யும் போது, உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி, தரம் தொடர்பாக நுகர்வோர் கவனம் செலுத்த வேண்டும். அதில் ஒட்டப்பட்டுள்ள லேபிள்கள் பற்றியும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் தொடர்பாகவும் வாசித்து அறிந்து கொள்ளுங்கள். பொருள்களை கொள்வனவு செய்யும் போது ஏதேனும் வித்தியாசத்தை உணர்ந்தால் அது தொடர்பாகவும் நுகர்வோர் விசேட கவனம் செலுத்த வேண்டும். – என்றார்.

மேலும், நாட்டில் மின் துண்டிப்பு நிலவி வருவதால் குளிர்ச்சாதனப் பெட்டிகளில் வைத்திருக்கக்கூடிய பொருள்களுக்கான வர்த்தகத்தில் ஈடுபடுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு வர்த்தகர்களிடம் பொது சுகாதார பரிசோதகர்கள் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

# தனக்கு எதிரான மனுவை விசாரணைசெய்ய பூரண நீதியரசர் அமர்வை கோரும் மைத்திரி!

கொழும்பு , பெஜட் வீதியில் அமைந்துள்ள வீட்டை, தனக்கு சொந்தமாக்கிக்கொண்ட முறைமை ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன எனக் கூறி, தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்ய 5 நீதியரசர்கள் அல்லது அதற்கு மேற்பட்டவர்களை உள்ளடக்கிய பூரண நீதியரசர்கள் அமர்வை நியமிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உயர் நீதிமன்றைக் கோரியுள்ளார்.



உயர் நீதிமன்றுக்கு கடந்த திங்கட்கிழமை நகர்த்தல் பத்திரம் ஊடாக இந்தக் கோரிக்கையை முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேனவின் சட்டத்தரணிகள் முன் வைத்துள்ளனர்.

நகர்த்தல் பத்திரம் ஊடாக அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு அழைத்த, மனுவின் பிரதிவாதிகளில் ஒருவரான முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்பு, மனுவுடன் தொடர்புடைய விடயம் அரசமைப்பின் 43(1),43(2) ஆகிய உறுப்புரைகளை ஆராய வேண்டிய விடயப் பரப்பாக காணப்படுவதால், பூரண நீதியரசர்கள் அமர்வு அதற்கு அவசியம் எனச் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், அடுத்த தவணையில் மனு விசாரணைக்கு வருவதற்கு முன்பதாக இந்த பூரண நீதியரசர்கள் அமர்வில் உள்ளடங்கும் நீதிபதிகளை பெயரிடுமாறும் அவர்கள் பிரதம நீதியரசரை கோரியுள்ளனர்.

ஏற்கனவே இந்த மனு உயர் நீதிமன்றால் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பின்னணியில் இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் மற்றும் அதன் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்துவால் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவில் மனுதாரருக்காக மன்றில் சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ ஆஜராகிறார்.

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக இருந்தகாலப்பகுதியில், அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமாக பயன்படுத்திய கொழும்பு, பெஜட் வீதியில் அமைந்துள்ள வீட்டை, ஜனாதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னரும் தொடர்ந்தும் பயன்படுத்துவதற்காக அவருக்கே கையளிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளதாக கடந்த 2019 ஒக்ரோபர் 16 ஆம் திகதி பத்திரிகை ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்த வீடு 180 மில்லியன் ரூபா செலவில் நவீனமயப்படுத்தப்பட்ட வீடாகும்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவையின் பிரதானியாக இருந்த ஒரு கூட்டத்திலேயே இதற்கான தீர்மானமும் எடுக்கப்பட்டுள்ளது.

மிகப் பெரும் வணிகபெறுமதியைக் கொண்ட பொது மக்களுக்கு சொந்தமான ஒரு சொத்தை, தான் பிரதானியாக இருக்கும் அமைச்சரவை ஊடாகத் தனக்கு சொந்தமாக்கிக்கொள்ள முன்னாள் ஜனாதிபதி எடுத்த நடவடிக்கை நியாயமற்றது.

இது 1986 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க ஜனாதிபதிகளின் உரிமைகள் சட்டத்துக்கும் முரணானது.

இந்த நடவடிக்கை ஊடாக முன்னாள் ஜனாதிபதி தனது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்துள்ளார். மக்கள் அவர் மீது வைத்த நம்பிக்கையைத் தகர்த்தெறிந்துள்ளார்.

அதனால் அந்த வீட்டை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அளிக்க அமைச்சரவை எடுத்த தீர்மானம் ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன என உத்தரவிடவும். – என மனுதாரர் மனுவூடாகக் கோரியுள்ளார்.

மனுவின் பிரதிவாதிகளில் ஒருவராக பெயரிடப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா ஆஜராகும் நிலையில் சட்ட மா அதிபர் சார்பில் மேலதிக சொலிசிட்டர் ஜெனரால் நரின் புள்ளே ஆஜராகின்றமை குறிப்பிடத்தக்கது.



# பெற்றோலிய கூட்டுத்தாபன விலைக்கேற்ப விலைகளைச் சமநிலைப் படுத்துங்கள்!

## ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் காமினி லொக்குகே கோரிக்கை

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலைக்கு ஏற்ப, எரிபொருள் விலைகளை சமநிலைப்படுத்துமாறு ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அந்த கோரிக்கையை ஐ.ஓ.சி. நிறுவனம் நடைமுறைப்படுத்தாமையால், அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக வலுசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

எரிபொருள் நெருக்கடி தற்போது படிப்படியாக தீர்க்கப்பட்டு வருகிறது. கேள்விக்கு ஏற்ற தொகையை விநியோகிக்க முடியாமையே தற்போது எமக்குள்ள பிரச்சினையாகும்.

வரையறுக்கப்பட்டளவில் எரிபொருளை வழங்கும் போது கலன்களில் எரிபொருளைப் பெற்றுக் கொள்ளும் வீதம் குறைவடையும். இவ்வாறு பாரிய கலன்களில் எரிபொருளைப் பெறுபவர்கள் சொந்தத் தேவைக்காக அன்றி , 75 சதவீதமானோர் அதிக விலைக்கு விற்கின்றனர் என எமக்குத் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களே இன்று ஏற்பட்டுள்ள மின்சார நெருக்கடிக்கு காரணமாகும். சுத்திகரிப்பு நிலையங்களுக்குத் தேவையான மசகு எண்ணெயை இறக்குமதி செய்தால் எமது தேவையில் 30 சதவீதமான பெற்றோல் உள்ளிட்டவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இவ்வாரம் 40 ஆயிரம் மெற்றிக் தொன் எண்ணெய் கப்பல்கள் இரண்டை வரழைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் விலைக்கு ஏற்ப, எரிபொருள் விலைகளை சமநிலைப்படுத்துமாறு ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனினும் அதற்கான நடவடிக்கையை அந்நிறுவனம் முன்னெடுக்கவில்லை. எனவே ஒப்பந்தத்தின் படி இதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் என்பது தொடர்பில் ஆராயப் பட்டு வருகிறது. – என்றார்.

# இலங்கையில் முதலீடு செய்ய புலம்பெயர் அமைப்புகள் மறுப்பு!

இலங்கையில் முதலீடுகளை செய்ய பிரித்தானிய புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மறுப்பு தெரிவித்துள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன. தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுயாட்சிக்கு இலங்கை அரசு உடன்பட வேண்டும் என புலம்பெயர் அமைப்புகள் தெரிவித்துள்ளன என அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளில் உள்ள பத்து புலம்பெயர் அமைப்புக்கள் இலங்கையில் முதலீடு செய்ய மறுத்துள்ளன எனக் கூறப்படுகின்றது.

தமிழ் இனப்படுகொலையை அரசு ஏற்றுக்கொண்டு வடக்கு, கிழக்கை தனியான பிரதேசங்களாக அங்கீகரிக்க வேண்டும் என இந்த புலம்பெயர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன என அந்த செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# கிம்புலா எலே குணாவின் சகா கொழும்பில் கைது!

இந்தியாவில் சிறை வைக்கப்பட்டுள்ள பிரபல போதைப் பொருள் கடத்தல்காரரான கிம்புலா எலே குணாவின் சகா ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார்.

குறித்த நபர் கடந்த (திங்கட்கிழமை) கொழும்பு 15 அளுத் மாவத்தையில் போதைப் பொருள் மற்றும் பணத்துடன் விசேட அதிரடி படையினரால் கைது செய்யப் பட்டுள்ளார்.

# பௌத்த பிக்குகள் கூறியமையாலேயே 20 ஆவது திருத்தத்தை ஆதரித்தோம்!

## விமல் கூறுகின்றார்



எல்லே குணவங்ச தேரர் மற்றும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஆகியோர் விடுத்த கோரிக்கை காரணமாகவே தான் உள்ளிட்ட தரப்பினர் 20 ஆவது அரசமைப்புத்திருத்தச்சட்டத்திற்குஆதரவாகவாக்களித்தோம் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

ராமஞ்ஞை பௌத்த பீடத்தின் மாநாயக்கர் மக்குலேவே விமல தேரரை சந்தித்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அமைச்சர் பஸில் ராஜபக்ஷவை நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்கினால், அது அரசை கொண்டு நடத்துவோரின் மனதை தேற்றலாம். எனினும் அதனைச் செய்வதற்கு அதிகம் தாமதமாகி விட்டது.

அவரை நிதியமைச்சர் பதவியில் இருந்து நீக்கினால், நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் என எண்ண முடியாது.

அதேவேளை, எல்லே குணவங்ச தேரர் மற்றும் முருத்தெட்டுவே ஆனந்த தேரர் ஆகியோரை வரவழைத்து ஜனாதிபதி விடயங்களைத் தெளிவுபடுத்தி, தேரர்கள் விடுத்த கோரிக்கைக்கு அமையவே நாங்கள் 20 ஆவது திருத்தச் சட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தோம்.

இதனை மற்றவர்கள் மீது சுமத்த மாட்டோம். இது நாங்கள் பொறுப்புக் கூற வேண்டிய முடிவு எனவும் வீரவன்ஸ தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதியால் கூட நாடாளுமன்றை இரண்டரை வருடத்துக்கு முன் கலைக்கமுடியாது

## தெளிவுபடுத்துகிறார் சபாநாயகர்



இரண்டரை வருடங்களுக்கு ஜனாதிபதியால் கூட நாடாளுமன்றத்தை கலைக்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறை, பலடுவ பௌத்த விகாரையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அரசமைப்பின் பிரகாரம் நாடாளுமன்றத்தை கலைக்க வழி உள்ளது. அதனைத் தவிர நாடாளுமன்றத்தை எவராலும் கலைக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# உணவு பொருள் அடங்கிய ஆயிரம் கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கின்றனவாம்!

உணவுப் பொருள்கள் அடங்கிய ஆயிரம் கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளன.

அத்தியாவசிய உணவுப் பொருள் இறக்குமதியாளர் சங்கத்தின் ஊடகப்பேச்சாளர் நிஹால் செனவிரத்ன இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அரிசி, சீனி, பருப்பு, மிளகாய் ஆகிய பொருள்கள் அடங்கிய மேலும் ஆயிரம் கொள்கலன்களே இவ்வாறு தேங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவற்றை விரைவில் விடுவிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு மேலதிக உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு டொலர் பற்றாக்குறை தடையாகவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், போதியளவு உணவுப் பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என நிஹால் செனவிரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

# டொலரின் பெறுமதி 450 ரூபாவை எட்டும்!

## பேராசிரியர் அமிந்தமெத்சில ஆரூடம்



முறையற்ற பொருளாதார முகாமைத்துவத்தால் இந்த வருட இறுதியில் அமெரிக்க டொலர் 450 ரூபாவை அடைவதை எவராலும் தடுக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வடமேல் பல்கலைக்கழகத்தின் வணிக கற்கைகள் பிரிவின் சிரேஷ்ட பேராசிரியர் அமிந்தமெத்சில பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகத் தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

இலங்கை, உணவு உட்பட அதிக பொருள்களை இறக்குமதி செய்யும் நாடு. அரசு இறக்குமதியை கட்டுப்படுத்தியிருந்தாலும், அது தோராயமாக 22 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்களை இறக்குமதி செய்கிறது.

அந்த வகையில் 230 ரூபாவில் இருந்த அமெரிக்கடொலர்தற்போது300ரூபாயாகஉயர்ந்துள்ளது. அதனால், மேலும் 2 கோடி ரூபா செலவிட வேண்டியுள்ளது. அந்தத் தொகையும் மக்களாலேயே செலுத்தப்படுகிறது.

தற்போது இலங்கையின் பணவீக்கம் ஆசியாவிலேயே அதிக பணவீக்கமாக பதிவாகி 17 சதவீதத்தை தாண்டியுள்ளது. இதேவேளை, இன்று வங்கி அமைப்பு சீரழிந்து வருகிறது. நமது வங்கி அமைப் பில் ஒரு வங்கி சரிந்தால், ஒட்டுமொத்த வங்கி அமைப்பும் சரிந்து நமது பொருளாதாரம் முடிவாகி விடும். நாட்டின் பணவீக்கம் 17 சதவீதமாக உள்ளது. டொலர் தட்டுப்பாடு காரணமாக சாதகமற்ற ஒப்பந்தங்களை செய்து வெளிநாடுகளுக்கு சொத்துக்களை கொடுக்க அரசு முயற்சிக்கும். ஆனால், மக்கள் வீதிக்கு இறங்கினால் அரசால் கட்டுப்படுத்த முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# கஞ்சிகுடிச்சாறு குடிதண்ணீர்த் திட்ட ஆராய்வுக் கூட்டம் முடிவின்றி முடிவு!



திருக்கோவில், கஞ்சிகுடிச்சாறு குடிதண்ணீர்த் திட்ட ஆராய்வுக் கூட்டம், மூன்றாவது தடவையும் தீர்மானமின்றி நிறைவு பெற்றது.

அம்பாறை, திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு குளத்தைப் புனரமைத்து குடிதண்ணீர் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பாக ஆராயும் மூன்றாவது கூட்டம் இன்று பிற்பகல் நடைபெற்றது.

திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரனின் ஒழுங்கமைப்பில், அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில், திருக்கோவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இக்கூட்டம் இடம்பெற்றது.

கஞ்சிகுடிச்சாறு குளத்தை புனரமைத்து, அதன் ஊடாக திருக்கோவில் பிரதேச மக்களுக்கான சுத்தமான குடிநீரை தொடர்ச்சியாக வழங்கும் நோக்குடன், சுமார் 240 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதை முன்னெடுப்பது தொடர்பாக அப்பகுதி விவசாயிகளுக்கும் அரச உயர் அதிகாரிகளுக்கும் இடையில் தொடர்ச்சியாக கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில், முதலாவது மற்றும் இரண்டாவது கூட்டங்களில் கஞ்சிகுடிச்சாறு விவசாய அமைப்புக்களின் எதிர்ப்புக் காரணமாக தீர்மானமன்றி கூட்டங்கள் நிறைவு பெற்றிருந்தன.

இந்நிலையில், இன்று மூன்றாவது கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, கஞ்சிகுடிச்சாறு விவசாயிகள் இக்கூட்டத்துக்கு அழைக்கப்பட்டிருந்தமையுடன், விவ சாய அமைப்புக்களில் இருந்து இருவர் மாத்திரம் கூட் டத்தில் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டது. இதை அடுத்து திருக்கோவில் பிரதேச செயலகத்துக்கு முன்பாக விவசாயிகள் அணிதிரண்டு தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

அங்கு அமைதியின்மை ஏற்பட்டதைத் தொடர்ந்து பொலிஸார் வரவழைக்கப்பட்டு, விவசாயிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கான அனுமதி வழங்கப்பட்டது. கூட்டம் அமைதியாக முன்னெடுக்கப்பட்டது.

மாவட்டச் செயலாளர், திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர், கிழக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள், கஞ்சிகுடிச்சாறு இராணுவ முகாம் அதிகாரி, கமநல சேவைகள் திணைக்கள அதிகாரி ஆகியோர் தமது கருத்துக்களை அங்கு தெரிவித்தனர்.

விவசாயிகளும் தமது பக்க நியாயங்களை முன்வைத்து, கஞ்சிகுடியாறு குடிதண்ணீர் திட்டத்துக்கு கடும் எதிர்ப்புத் வெளியிட்டனர். குளத்தைப் புனரமைத்து குடிதண்ணீர்த் திட்டத்தை முன்னெடுக்குமாறு அவர்கள் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து கஞ்சிகுடிச்சாறு பகுதிக்கு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டு ஒரு மாத காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு, துறைசார் அதிகாரிகளுக்கு மாவட்டச் செயலாளர் பணிப்புரை விடுத்தார்.

# பயங்கரவாத சட்டத்தின் கீழ் மேலோட்டமான திருத்தங்கள் அனைவரையும் ஏமாற்றுவதாகும்!

## மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம்

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நிகழ்த்தப்படும் மீறல்களை உடனடியாக முடிவிற்குக்கொண்டுவருமாறு சர்வதேச சமூகத்தால் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டுவந்த நிலையில், கடந்த வாரம் நாடாளுமன்றத்தில் மேலோட்டமான திருத்தங்களை நிறைவேற்றியதன் ஊடாக அனைவரையும் ஏமாற்றுவதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சிக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் விசனம் வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் கண்காணிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பவை வருமாறு -

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மிகமோசமான சரத்துக்கள் தொடர்பில் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள திருத்தங்களில் அவதானம் செலுத்தப்படவில்லை என்று ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்களும் ஐக்கிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்மொழியப்பட்ட அந்தத் திருத்தங்களை உடனடியாக நிறைவேற்றவேண்டும் என்பதற்காக, மனித உரிமைகள் அமைப்புக்களின் ஆலோசனைகளுக்கு இடமளிக்கக்கூடியவாறான உபகுழு ஆராய்வை அரசாங்கம் தவறவிட்டுள்ளது, அதன்விளைவாக அந்தச் சட்டத்தை சர்வதேச மனித உரிமைகள் நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைக்கக் கூடியவாறான முக்கிய சந்தர்ப்பம் நழுவவிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் கடந்த நான்கு வருடகாலமாக நபர்களைத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கும் சித்திரவதைகளுக்கு உட்படுத்துவதற்கும் சிறுபான்மையினத்தவர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளை இலக்குவைப்பதற்கும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்திவந்திருக்கின்றது.

தற்போது திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும்கூட, எவ்வித ஆதாரங்களையும் சமர்ப்பிக்காமல் நபர்களைப் பலவருடங்களுக்குத் தன்னிச்சையாகத் தடுத்துவைப்பதற்கு அந்தச் சட்டம் இடமளிப்பதுடன் பிணை வழங்கலுக்கான வாய்ப்பையும் இல்லாமல் செய்கின்றது.

அத்தோடு சித்திரவதைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கு ஏதுவான அர்த்தமுள்ள திருத்தங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

தற்போது அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாட்டுக்கும் பணவீக்கத்திற்கும் வழிவகுத்திருக்கக்கூடிய கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் முறையற்ற பொருளாதார நிர்வாகத்துக்கு எதிராகப் பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இப்போது இடம்பெற்றுவரும் மீறல்கள் தொடர்பில் பல்வேறு அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கக்கூடிய அரசாங்கம், சர்வதேசத்திடமிருந்து நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது போன்று காண்பிக்க முயற்சிக்கின்றது.

இலங்கைவாழ் மக்கள் உணவு, எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாட்டுக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அவர்களுக்கு சர்வதேச சமூகத்தின் உதவி தேவைப்படுகின்றது.

இருப்பினும் அரசாங்கம் தமது வெளிநாட்டு பங்காளிகள் நியாயமான மனித உரிமைசார் மறுசீரமைப்புக்களையும், மீறல்களை முடிவிற்குக்கொண்டுவந்து நீதியை நிலைநாட்டுவதற்கான அர்த்தமுள்ள நடவடிக்கைகளையும் எதிர்பார்க்கின்றார்கள் என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும் என்று அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பிரதேச செயலாளரின் ஆதரவுடன் செட்டிகுளத்தில் தொடர் காடழிப்பு!

## திலீபன் எம்.பி. குற்றச்சாட்டு





வவுனியா, செட்டிகுளம் பகுதியில் பிரதேச செயலாளரின் ஆதரவுடன் தொடர்ந்தும் காடழிப்பு இடம்பெற்று வருவதாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான கு. திலீபன் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு -

வவுனியா, செட்டிகுளம் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரமனாலங்குளம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கூழாங்குளம் பகுதியில் 200 ஏக்கருக்கு மேற்பட்ட காட்டுப் பகுதி வவுனியா நகரப் பகுதியில் வர்த்தக நிலையங்களை நடத்துபவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றது.

அங்குள்ள பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகளின் துணையுடன் காட்டுப் பகுதிகளில் வேலைகளையிட்டு, பின்னர் காணிகளைப் படிப்படியாகத் துப்புரவு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி நபர்கள் அங்குள்ள அதிகாரி ஒருவருக்கு மிக நெருக்கமானவர் எனவும் தெரியவருகிறது.

குறிப்பாக யுத்தம் காரணமாக பாதிப்படைந்து மீள் குடியேறியுள்ள கன்னாட்டி, கூழாங்குளம், கணேசபுரம், நீலியாமோட்டை ஆகிய பகுதிகளில் உள்ள பலரும் தமது விவசாயம் மற்றும் வாழ்வாதாரத் தேவைக்காகப் போதியளவிலான நிலமின்றி அவதிக்குள்ளாகியுள்ள நிலையில், பெரிய பண முதலைகள் வேறு பகுதியில் இருந்து சென்று அந்தப் பகுதியில் அரச அதிகாரிகளின் துணையுடன் காடழித்து நிலங்களை அபகரித்து வருகின்றனர்.

இது தொடர்பில் மக்களால் அப்பகுதி கிராம அலுவலர் மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் ஆகியோருக்கு தெரியப்படுத்தியும் காடழிப்பு நடவடிக்கைகளும், அங்கு இடம்பெறும் அபிவிருத்தி நடவடிக்கைகளும் தடுத்து நிறுத்தப்படவில்லை. இது தொடர்பில் எனக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு சென்று நிலைமைகளைப் பார்வையிட்டமையுடன், வனவளத் துறையினர் மற்றும் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தி காடழிப்புநடவடிக்கையைத்தடுத்துநிறுத்தியுள்ளமையுடன், மாவட்ட அரச அதிபரின் கவனத்துக்கும் இந்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்தியுள்ளேன்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் செட்டிகுளம், சின்னசிப்பிக்குளம் பகுதியில் இவ்வாறு 100 ஏக்கர் வரையிலான காடுகள் அழிக்கப்பட்ட நிலையில் தடுத்து நிறுத்தியிருந்தேன். இவ்வாறு பொறுப்புடன் செயற்பட வேண்டிய அரச அதிகாரிகள் தொடர்ச்சியான காடழிப்பு நடவடிக்கைகளுக்கு உடந்தையாக செயற்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மரியசேவியர் அடிகளாரின் முதலாம் ஆண்டு நினைவு!

திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் ‘கலைத்தூது’ அருட்கலாநிதி நீ.மரிய சேவியர் அடிகளாரின் மறைவின் முதலாமாண்டு நினைவு நிகழ்வுகள் திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் (வெள்ளிக்கிழமை) இடம்பெறவுள்ளன.

இதற்கமைவாக அன்றையதினம் மு.ப.11 மணிக்கு யாழ்.தூய மரியன்னை பேராலயத்தில் நினைவுத் திருப்பலி இடம்பெறும்.

மாலை நிகழ்வுகள் இல.15, றக்கா வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலாமுற்றத்தில் பி.ப.4 மணிக்கு ஆரம்பமாகும். சர்வமதத் தலைவர்களின் ஆசியுரைகளுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வுகளுக்கு மன்றத்தின் பிரதி இயக்குநர் யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமை தாங்குவார்.

இதன்போது மரிய சேவியர் அடிகளாரின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவாலயத்தை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருள்திரு யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை திறந்து வைப்பார். தொடர்ந்து இசை அஞ்சலி, நினைவஞ்சலி உரைகள் என்பவற்றுடன் மரிய சேவியர் அடிகளாரின் முதலாமாண்டு நினைவாக தொகுக்கப்பட்ட ‘மரியசேவியம்’ என்ற நூலின் வெளியீடும் இடம்பெறும்.

இந்த நிகழ்வுகளில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.



# 10 லட்சம் ரூபா பெறுமதி கொண்ட முதிரைக் குற்றிகள் வவுனியாவில் மீட்பு

வவுனியா கூமாங்குளத்தில் சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் மீட்கப்பட்டன என பண்டாரிக்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பண்டாரிக்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலிற்கமைய கூமாங்குளத்தில் உள்ள வெற்றுக் காணியில் இருந்தே 18 மரக்குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதுடன் அப்பகுதியைச் சேர்ந்த 32வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

இந்த மரக்குற்றிகள் மடுவில் இருந்து சட்டவிரோத மான முறையிலே வெட்டப்பட்டு காட்டுப்பகுதியின் ஊடாக கடத்தபட்டு வவுனியா கூமாங்குளம் பகுதியில் உள்ள வெற்றுக்காணிக்கு கொண்டுவரப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் பண்டாரிக்குளம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ராஜபக்ஷக்களிடம் இருந்து நாட்டை மீட்கவே விடுதலைப் புலிகளின் தலைவர் போரிட்டுள்ளார்!

## சிங்களப் பெண் உருக்கமாக காணொலி பதிவு

ராஜபக்ஷவினரிடம் இருந்து நாட்டைக் காப்பாற்றவே விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் போரில் ஈடுபட்டார் என்று, நினைத்துப் பார்க்கும் போது எண்ணத் தோன்றுவதாக சிங்கள பெண்ணொருவர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைத்தளத்தில் வெளியிட்டுள்ள காணொலியில் அவர் இதனைக் கூறியுள்ளார். இந்த காணொலி சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

எண்ணிப் பார்க்கும் போது ராஜபக்ஷவினரிடம் இருந்த நாட்டை காப்பாற்றவே பிரபாகரன் யுத்தம் செய்துள்ளார். பிரபாகரன் இறந்தும் எம்மை பார்த்து சிரித்துக்கொண்டிருப்பார்.

புலிகள் தாக்கி கொல்லப்பட்டிருந்தால், இதனை விட நன்றாக இருந்திருக்கும். எமக்கு நேரிட்டுள்ள நிலைமை கொடூரமானது என அந்தப் பெண் கூறியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## மோடியை நேரில் சந்தித்துப் பேச

# தமிழ்க் கட்சிகளின் எம்.பிக்கள் ஓகஸ்ட் மாதம் டில்லி பயணம்?



தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதமளவில் இந்தியா செல்லக்கூடும் என இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு இந்தியாவின் தலையீட்டைக் கோரி தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக் குக் கடிமொன்றை அனுப்பி இருந்தன.

இந்தக் கடிதம் உட்பட அரசியல் தீர்வுத் திட்டம் சம்பந்தமாகக் கலந்துரையாடவே தமிழ்த் தேசியக் கட்சிகளின் பிரதிநிதிகள் புதுடில்லி செல்லவுள்ளனர்.

இந்தியப் பிரதமரை நேரில் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்து வருகின்றது.

புதுடில்லி செல்லும் திட்டம் இரு தடவைகள் பிற்போடப்பட்டன. எனினும், ஓகஸ்ட் மாதளவில் இந்தச் சந்திப்பு நடை பெறுவதற்கான சாத்தியம் அதிகம் என வும் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

---

### பத்து மணிநேரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மின்துண்டிப்பை மேற்கொள்வது தொடர்பில் மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு இலங்கை பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி A,B,C,D,E,F,G,H,I,J,K,L ஆகியவலயங்களுக்குஉட்பட்டபிரதேசங்களுக்கு இன்று காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் 6 மணித்தியாலங்களும், மாலை 6 மணிமுதல் நள்ளிரவு 12 மணிவரையான காலப்பகுதியினுள் 4 மணித்தியாலமும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப் படவுள்ளது.

அத்துடன், P,Q,R,S,T,U,V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரையான காலப்பகுதியினுள் 6 மணித்தியாலங்களும், மாலை 6 மணி முதல் நள்ளிரவு 12 மணிவரையான காலப்பகுதியினுள் 4 மணித்தியாலங்களும் மின்வெட்டை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

---

### யாழில் 2 பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நீதிமன்றால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நீதிமன்ற உத்தரவை நடைமுறைப் படுத்தச் சென்ற இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட இருவரையும் கைதுசெய்ய முயன்றபோது, அங்கு நின்ற கும்பல் ஒன்று இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் கடமைக்கு இடையூறு விளைவித்ததுடன், அவர்கள் மீதும் தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

அதையடுத்து அங்கிருந்து விலகி இரு பொலிஸ் உத்தியோகஸ்தர்களும் பொலிஸ் நிலையம் திரும்பியுள்ளனர்.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளனர்.

---

### இலங்கைத் தொழிலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செந்தில் தொண்டமான் ஏகமனதாக தெரிவு செய்யப்படவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை இன்று கூடவுள்ளது. இதன்போது புதிய தலைவர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

தலைமைப் பதவிக்கு ஆரம்பத்தில் இருமுனைப் போட்டி நிலவிவந்தாலும் செந்தில் தொண்டமானுக்கான ஆதரவு வலுத்ததால், அப்பதவிக்கு போட்டியிடுவதில்லை என மற்றைய தரப்பு தீர்மானித்துள்ளது.

கட்சியின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தலைமையில் விசேட கூட்டமொன்று நேற்று இடம்பெற்றது. இதன்போது பதவிகளுக்கான உறுப்பினர் தேர்வு சம்பந்தமான பட்டியலில் இறுதிப்படுத்தப்பட்டது எனத் தெரியவந்துள்ளது.

---

# சூழ்ச்சிக்காரர்கள் வெளியேற்றம்; இந்த அரசைக் கவிழ்க்க முடியாது!

## ‘மொட்டு’ கட்சி திட்டவட்டம்



சூழ்ச்சிக்காரர்கள் அரசிலிருந்து வெளியேறி விட்டனர். எனவே, அரசின் இருப்புக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை. இந்த அரசை எவராலும் கவிழ்க்கவே முடியாது.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் மற்றும் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன ஆகியோர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

து தொடர்பில் ஊடகங்களிடம் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

அரசின் நாடாளுமன்ற அணி பலமாகவே உள்ளது. எமது பக்கம் உள்ளவர்கள் மீது எமக்குப் பூரண நம்பிக்கை உள்ளது. அரசின் திட்டங்களை அவர்களும் நம்புகின்றனர். எனவே, பலமான அரசாக இந்தப் பொருளாதாரச் சவாலை வெற்றி கொள்வோம். அடுத்த தேர்தலில் வெற்றி நடையும் போடுவோம்.

சூழ்ச்சிக்காரர்கள் வெளியேறிவிட்டனர். அங்கும், இங்கும் சென்று ஒப்பாரி வைக்கின்றனர். முடிந்தால் 113 என்ற சாதாரணப் பெரும்பான்மையை இல்லாது செய்யுமாறு சவால்விடுக்கின்றோம். அது அவர்களால் முடியாது. நாம் கெஞ்சபோவதும் இல்லை. பலம் பொருந்திய தலைவரான பஸில் ராஜபக்ஷவை வீழ்த்துவதற்கே முற்படுகின்றனர். அதற்கு நாம் இடமளிக்கமாட்டோம் - என்றனர்.

---

### இது ஆட்சிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எனினும், உள்நோக்கம் இருக்குமானால் அதனை ஏற்கமுடியாது. அதேபோல் இனவாத ரீதியிலான அரசியலையும் நாம் நிராகரிப்போம் என்றும் ரணில் குறிப்பிட்டார்.

தற்போதைய சூழ்நிலை ஆட்சி மாற்றத்துக்கு உகந்த தருணம் அல்ல எனவும், நாட்டை மீட்க அனைவரும் ஒன்றுபட வேண்டும் எனவும் அவர் சுட்டிக் காட்டினார்.

சர்வகட்சி மாநாட்டில் பங்கேற்பதற்கு தாம் எடுத்த முடிவில் எவ்வித தவறும் இல்லைஎனவும்அவர்மேலும்கூறினார்.

---

### தேசிய அரசும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த நல்லாட்சி அரசால் - தேசிய அரசால்தான் நாடு இந்தளவு நெருக்கடியைச் சத்துள்ளது. இந்நிலையில், மீண்டுமொரு தேசிய அரசு எதற்கு?

எமது அரசு பெரும்பான்மைப் பலத்துடன் இன்னமும் இருக்கின்றது. அரசைக் கவிழ்க்கச் சதி செய்வோர் தொடர்பில் நாம் கவனம் எடுத்துள்ளோம். அவர்களின் கனவு ஒருபோதும் நனவாகாது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலைமை விரைவில் முடிவுக்கு வரும் - என்றார்.

---

### முதன்முறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிகரித்து வருவதால் இலங்கையில் தங்கம் மீதான விலையில் தாக்கம் செலுத்தியுள்ளது

யாழ்ப்பாணத்தில் நேற்று 22 கரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு இலட்சத்து 83 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் ஒரு இலட்சத்து 69 ஆயிரத்து 500 ரூபாவாகக் காணப்பட்டது.

அதேவேளை, 24 கரட் தூய தங்கம் நேற்று பவுண் ஒன்று 2 இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் 24 கரட் தூய தங்கத்தின் விலை ஒரு பவுண் ஒரு இலட்சத்து 85 ஆயிரம் ரூபாயாகக் காணப்பட்டது.

---

# இலங்கை, இந்திய மீனவர்கள் கைது



கைதான இந்திய மீனவர்கள் மற்றும் அவர்களின் படகு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.30

இலங்கை, இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிய குற்றத்தில் மற்றைய தரப்புக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரத்தில் இருந்து 366 இலக்க படகில் புறப்பட்ட 4 தமிழக மீனவர்கள் நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் உள் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட சமயம் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மயிலிட்டி துறைமுகத்திற்கு அழைத்து வரப்படுகின்றனர்.

இதேநேரம் யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை, ஆதிகோவிலடியில் இருந்து பயணித்த மீனவ படகு ஒன்று இந்தியாவின் காரைக்கால் பகுதிக்குள் நுழைந்ததாக கைது செய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

# 13 ஆண்டுகளின் பின்னர் சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை வென்றது மே.இ.தீவுகள்




இங்கிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி தொடரையும் கைப்பற்றியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, தனது முதல் இன்னிங்ஸில் 204 ஓட்டங்களும் மேற்கிந்தியத் தீவுகள் அணி 297 ஓட்டங்களும் எடுத்தன. இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து120 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால், 28 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணி விக்கெட் எதனையும் இழக்காது 10 விக்கெட்டுக்களால் அபாரமாக வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1– 0 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றியது. 2009ஆம் ஆண்டுக்குப் பின்னர் சொந்த மண்ணில் டெஸ்ட் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் அணி கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பர்முயுலா–1 கிராண்ட் பிரிக்ஸ் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் சம்பியன்!




சவுதி அரேபியா பர்முயுலா–1 கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில், ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான 'பார்முயுலா 1' கார் பந்தயத் தொடர், 23 சுற்றுகளாக ஒவ்வொரு நாடுகளில் நடைபெறுகின்றது.

இதன்படி, நடப்பு ஆண்டின் இரண்டாவது சுற்றான சவுதி அரேபியா கிராண்ட் பிரிக்ஸ், நேற்று ஜெடா கார்னிச் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 308.45 கிலோ மீற்றர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 19 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில் ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 24 நிமிடங்கள் 19.293 விநாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டன.

அவரை விட 0.549 விநாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, பெர்ராரி அணியின் சார்லஸ் லெக்லெர்க், இரண்டாவது இடத்தை பெற்றார். அத்தோடு அவர், இரண்டாம் இடத்திற்கான 19 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார்.

8.097 விநாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, பெர்ராரி அணியின் கார்லோஸ் செய்ன்ஸ், மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள இரண்டு சுற்றுகளின் முடிவில், பெர்ராரி அணியின் சார்லஸ் லெக்லெர்க், ஒரு சம்பியன் பட்டத்துடன் 45 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

பெர்ராரி அணியின் கார்லோஸ் செய்ன்ஸ் 33 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், ரெட் புல் அணியின் மேக்ஸ் வெர்ஸ்டாப்பன் ஒரு சம்பியன் பட்டத்துடன் 25 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

பர்முயுலா–1 கார்பந்தயத் தொடரின் மூன்றாவது சுற்றான ஆஸ்திரேலியன் கிராண்ட் பிரிக்ஸ், அடுத்த மாதம் 10ஆம் திகதி மெல்பேர்ன் கிராண்ட் பிரிக்ஸ் சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.



## லக்னோ–குஜராத் போட்டியில் பதிவான சில முக்கிய நிகழ்வுகள்

ஐ.பி.எல். 2022 தொடரின் நேற்றைய ஆட்டத்தில் லக்னோ–குஜராத் மோதியிருந்தன. கடைசி ஓவர் வரை நகர்ந்த இந்தப் போட்டியில் குஜராத் அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் சில சுவாரஸ்ய சம்பவங்கள் அரங்கேறின.

குஜராத் அணியில் இடம்பிடித்த ஆஸ்திரேலியா அணி வீரர் மத்யூ வேட், 11 வருடங்களுக்குப் பின்னர் ஐ.பி.எல். போட்டியில் களமிறங்கியுள்ளார். அவர் கடைசியாக 2011 ஆம் ஆண்டில் டெல்லி அணியிலும் புனே வொரியர்ஸ் அணியிலும் இடம்பிடித்திருந்தார். ஒரு வீரர் ஐ.பி.எல். தொடரின் இரு போட்டிகளில் விளையாடுவதற்கு இடையேயான மிக நீண்ட இடைவெளி இதுவாகும்.

லக்னோ அணித்தலைவரான கே.எல். ராகுல் 63 போட்டிகளில் விளையாடி 2, 500 ஓட்டங்களை எடுத்துள்ளார். துடுப்பாட்டத்தில் இவரது சராசரி 52.3 ஆகும். தொடர்ச்சியாக நல்ல ஸ்கோர்களை எடுத்த இவர் நேற்றைய ஆட்டத்தின் மூலம் மோசமான சாதனையொன்றையும் படைத்துள்ளார். 63 போட்டிகளில் விளையாடிய இவர் முதல் முறையாக கோல்டன் டக் முறையில் எதிர்கொண்ட முதல் பந்திலேயே வெளியேறியுள்ளார். ஐ.பி.எல். போட்டிகளில் இரண்டாவது முறையாக ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் விக்கெட்டை அவர் இழந்துள்ளார்.

லக்னோ அணியின் புதுமுக இளம் வீரரான பதோனி புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளார். தனது முதல் ஐ.பி.எல். போட்டியில் அரைச் சதம் அடித்த மூன்றாவது இளம் வீரர் என்ற சாதனையை இவர் படைத்துள்ளார். 22 வயதான பதோனி 3 வருடங்களாக ஐ.பி.எல். ஏலத்தில் பங்கேற்று எந்த அணியினாலும் வாங்கப்படாத வீரராக இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணி வீரர் பெர்குசனின் புயல் வேகப் பந்துகளை பதோனி அநாயசமாகக் கையாண்டு கவனம் ஈர்த்திருந்தார். அவரது ஓவரில் பவுண்டரி சிக்சர் என பறக்க விட்டார். குறிப்பாக 147 கி.மீ. வேகத்தில் வீசிய பந்தை பதோனி பவுண்டரியாகவும் 148 கி.மீ. வேகத்தில் வீசிய பந்தை சிக்ஸராகவும் அடித்திருந்தார்.

இந்த சீசனில் நடந்து முடிந்துள்ள 4 போட்டிகளிலுமே நாணயச் சுழற்சியில் வென்ற அணியே போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.




## மியாமி பகிரங்க டென்னிஸ் தொடர் சிட்ஸிபாஸ் காலிறுதிக்கு முன்னேற்றம்!

மியாமி பகிரங்க டென்னிஸ் தொடரில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ் மற்றும் போலந்தின் இகா ஸ்விடெக் ஆகியோர் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறியுள்ளனர். ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுப் போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ் மற்றும் அலெக்ஸ் டி மினார் ஆகியோர் மோதினர். பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், கிரேக்கத்தின் ஸ்டெபீனோஸ் சிட்ஸிபாஸ், 6–4, 6–3 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு நான்காவது சுற்றுப் போட்டியில், போலந்தின் இகா ஸ்விடெக், அமெரிக்காவின் இளம் வீராங்கனையான கோகோ கோப்பை எதிர்கொண்டார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில், இகா ஸ்விடெக், 6–3, 6–1 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று காலிறுதிக்கு தகுதிபெற்றார்.

# அரசாங்கத்தின் அசமந்தப் போக்கால் மக்கள் நடுவீதியில் நிற்கும் நிலை!

## வேலுகுமார் எம்.பி. காட்டம்



அரசின் அசமந்த போக்கால் நாட்டு மக்கள் நடு ரோட்டில் வீதியில் நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரசுக்கு எதிர்ப்பை தெரிவிக்க ஒன்றிணைவோம் என கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாடு வரலாறு காணாத பொருளாதார பின்னடைவைச் சந்தித்துள்ளது. மக்களின் நாளாந்த செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் பல்வேறு வழிகளில் அழுத்தத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

அத்தியாவசியப் பொருள்களுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இன்றைய அரசாங்கத்தின் அசமந்தப் போக்கால், நாட்டு மக்கள் நடுரோட்டில் நிற்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இன்றைய அரசாங்கம், நாட்டு மக்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளது.

நாளாந்த தேவைகளுக்கு அவசியமான சமையல் எரிவாயு, மண்ணெண்ணெய், உட்பட அனைத்து எரிபொருள்களையும் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

தாம் உயிர்வாழ்வதற்காகப் பொருள்களை வாங்க வரிசைகளில் நின்று தமது உயிரை இழக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

வயது முதிர்ந்தவர்கள் தமது ஓய்வுக் காலத்தை நிம்மதியாகச் செலவிடுவதை விடுத்து வரிசைகளில் நின்று, நெரிசல்களில் அகப்பட்டு, உயிரை விடும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

மறுபுறமாக வரிசைகளில் தோன்றியுள்ள மோதல்கள், கைகலப்புகளைத் தாண்டி, கொலை செய்யும் நிலைக்குச் சென்றுள்ளது. இந்நிகழ்வுகள் நாடு மிக மோசமான நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதையே காட்டுகின்றது.

மக்கள் பல்வேறு வழிகளிலும் மன உளைச்சலுக்கும், அழுத்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர். ஒரு புறம் தமது வருமான வழிகளை இழந்துள்ளனர். மறு புறம் பொருள்களின் விலைவாசிகள் என்றும் இல்லாதவாறு பல மடங்கு அதிகரித்துள்ளன.

பொருள் தட்டுப்பாட்டால் நாள் முழுவதும் வரிசைகளில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. அதனால் தொழிலிற்குச் செல்வதில் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளன. போக்குவரத்து பிரச்சினை, எழுது கருவி பிரச்சினை எனத் தொடருகின்றது. இவை பாரிய மக்கள் போராட்டமொன்று வெடிக்கும் நிலைமையை ஏற்படுத்தி வருகின்றது. அரசாங்கத்தின் கொள்கை வகுப்புக்கள், திட்டமிடல்கள் தோல்வியடைந்துள்ளன.

உரிய காலத்தில் தீர்மானங்களை எடுக்காமை, அனைத்திற்கும் பிற்போடப்பட்ட, காலம் தாழ்த்திய, அசமந்த போக்கினை கடைப்பிடித்தமை, இன்று இந்நிலைமையைத் தோற்றுவித்துள்ளது.

எனினும் அரசாங்கம் இதனைப் புரிந்து கொண்டுள்ளதாகத் தெரியவில்லை. மேலும் மேலும் தற்காலிக மூடி மறைப்புகளைச் செய்வதையே அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

அரசாங்கத்தின் இம்மூடி மறைப்பை வெளிச்சத்துக்குக் கொண்டுவந்து மேலும் மோசமான நிலைமை தோன்றுவதைத் தடுக்க தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலவாக்கலை நகரில் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரும் ஒன்றிணைவோம் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# வலையில் சிக்கிய சடலம்

அக்கரைப்பற்று கடலிலிருந்து கடற்தொழிலாளர்களின் கரைவலையில் சிக்குண்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடற்தொழிலாளர்கள் நேற்று (செவ்வாய்க்கிழமை) காலை கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது அவர்களின் கரைவலையில் சிக்குண்ட நிலையில் சடலம் காணப்பட்டுள்ளது.

# பங்களாதேஷிடம் மீண்டும் கடன் பெறவுள்ள இலங்கை

பங்களாதேஷிடம் இருந்து மேலும் 25 கோடி அமெரிக்க டொலர் நிதி வசதியை இலங்கை கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இரு நாடுகளுக்கும் இடையிலான நாணய பரிமாற்ற ஏற்பாடாக இது அமையும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னரும்,அந்நிய செலாவணி நெருக்கடியை சமாளிக்க பங்களாதேஷ் இதேபோன்ற வசதியை இலங்கைக்கு வழங்கியது.

இதேவேளை ஏற்கனவே இந்தியாவிடம் இருந்து பெற்ற 100 கோடி டொலர்களுக்கு மேலதிகமாக மேலும் ஒரு பில்லியன் டொலர்களை இலங்கை இந்தியாவிடம் கோரியுள்ளது

அத்துடன், சீனாவிடம் இருந்தும் 2.5பில்லியன் டொலர்களை இலங்கை கடனாகக் கோரியுள்ளது.

# ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம் தமிழ் நூல்களுக்கான பரிசளிப்புத் திட்டம்

ஆஸ்திரேலியாவில் கடந்த இருபது வருடங்களுக்கும் மேலாக தமிழ் இலக்கியம் மற்றும் கலைச் செயற்பாடுகளில் ஈடுபட்டுவரும் ஆஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச் சங்கம்இ இலங்கையில், வெளியிடப்படும் தமிழ் நூல்களுக்குப் பரிசு வழங்கும் திட்டமொன்றை கடந்த 2021 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தி வருகிறது.

இலங்கையில் வாழும் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் இந்தத் திட்டம் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டுகளில் இலங்கையில் வெளியான தமிழ் நூல்களுக்காக நடந்த தெரிவில், பரிசுபெற்ற எழுத்தாளர்கள் பற்றிய விவரங்கள் ஏற்கனவே ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தது.

மீண்டும் இந்த பரிசளிப்புத் திட்டம் இம்முறையும் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

இந்தத்திட்டம் கீழ்வரும் தேவைப்பாடுகள் மற்றும் விதிமுறைகளைக் கொண்டு அமைந்துள்ளது.

1. கடந்த 2021 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை ஆகிய நான்கு துறைகளில் வெளியான தமிழ் நூல்களே இந்தத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

2. ஒவ்வொரு துறையிலும் சிறந்ததாகத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு நூலுக்கு தலா 50 ஆயிரம் இலங்கை ரூபா பரிசாக வழங்கப்படும்.

3. நூலாசிரியரின் முழுப்பெயர், வயது, முகவரி, தொலைபேசி இலக்கம் மற்றும் மின்னஞ்சல் முகவரி ஆகியவை அடங்கிய சுயவிபரக் குறிப்பொன்றையும் நூலுடன் இணைத்தனுப்புதல் வேண்டும்.

4. நூலின் இரண்டு பிரதிகள் எதிர்வரும் 30.06. 2022 ஆம் திகதிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக இதில் தரப்படும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

5. நடுவர்களின் தீர்ப்பையடுத்து பரிசுக்குத் தெரிவான நூல்கள் பற்றிய விவரம் பத்திரிகைகள், இதழ்கள்,இணைய ஊடகங்கள் மூலம் வெளியிடப்படும் என்பதுடன் பரிசு பெற்றவர்களுக்கு மின்னஞ்சல் மூலமும் அறியத்தரப்படும்.

6. நூலாசிரியர் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன், வேறெந்த நாட்டின் பிரஜா உரிமையோ அல்லது வதிவிட உரிமையோ இல்லாதவராகவும், வேறெந்த நாட்டிலும் இப்பொழுது வசித்துக் கொண்டிராதவராகவும் இருத்தல் வேண்டும்.

நூல்களை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:
ATLAS
46, ALAMEIN STREET
MORWELL
VICTORIA – 3840
AUSTRALIA
மின்னஞ்சல்:- atlas25012016@gmail.com

# தலைக்கவசமின்றி மோட்டார் வாகனம் செலுத்தல் விபத்தைத் தடுக்க முன்மாதிரியான பொறிமுறை!

## கொழும்புத்துறையைச் சேர்ந்தவரால் வடிவமைப்பு



(இ. கலையமுதன்)

யாழ்ப்பாணம், மார்ச் 30

தலைக்கவசம் இல்லாமல் மோட்டார் வண்டிகளை செலுத்துவதால் ஏற்படும் விபத்துக்கள் தடுப்பதற்காக முன்மாதிரியான ஒரு பொறிமுறையொன்றை யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவர் வடிவமைத்துள்ளார்.

30 வருடங்களாக மோட்டார் வாகன திருத்துநராக இருக்கும் கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த எட்வின் மொரிஸ் என்பவரே இந்த பொறிமுறையை வடிவமைத்துள்ளார்.

இதன்படி தலைக்கவசம் அணியாமல் போடாமல் மோட்டார் வண்டியை இயக்க முடியாது. அதேவேளை தலைக் கவசத்தை போட்டாலும் தலைக்கவசத்தின் கொழுக்கி களை மாட்டினால் மாத்திரமே மோட்டார் வண்டி இயங் குமாறு அந்த பொறிமுறை வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் தலைக்கவசத்தின் கொழுக்கிகளை கழற்றும் போது மோட்டார் வாகனம் நின்றுவிடுமாறு வடிவமைக் கப்பட்டுள்ளது.

மேற்படி பொறிமுறையில் சில பின்னடைவுகள் காணப்பட்டாலும் கூட இவ்வாறான ஒரு முன்மாதிரியான முயற்சியை வரவேற்பது அவசியமாகும். அந்த வகையில் இந்த பொறிமுறையை வடிவமைத்த எட்வின் மொரிஸை நாம் தொடர்பு கொண்டபோது –

தலைக்கவசம் அணியாமல் ஏற்படுகின்ற மோட்டார் வாகன விபத்துகளை தவிர்ப்பதற்காக தான் இதனை ஐந்து வருடங்களுக்கு மேலாக முயற்சி செய்தார் எனவும் தற்போது இதனை வெற்றிகரமாக செய்ய முடிந்தது எனவும் தெரிவித்தார். அதேவேளை ஏனைய மோட்டார் வாகனங்களுக்கும் இந்த பொறிமுறையை செய்யும்பொழுது ஓரளவிற்கு மோட்டார் வாகனம் செலுத்துவதால் ஏற்படும் விபத்துக்களை தடுக்க முடியும். – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.03.2022இல் வெளியிடப்பெற்றது.